**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் II - 2016**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் II இன் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2001 பெப்ரவரி 20 ஆந் திகதிய ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையத்திற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையேயான உடன்படிக்கையின் கீழ் கொழும்பு நகரிற்கு வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலைகள் மீதான விரிவான வடிவமைப்பு ஆய்விற்கு 580 ஜப்பானிய யென்களுக்கு நிகரான ரூபா 417 மில்லியன் மானியத்துடன் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 11 ஆம் கட்டத்தின் கீழ் கடுவெல தொடக்கம் கடவத்தை வரையிலான 8.9 கிலோமீட்டர் பிரிவை நிர்மாணிப்பதற்கு முறையே 2008 யூலை 29 மற்றும் 2011 மார்ச் 22 ஆந் திகதிகளில் SL-P91 மற்றும் SL - P101 எனும் உடன்படிக்கைகள் ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையத்திற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்குமிடையே உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுமிருந்தன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தினது II ஆம் கட்டத்திற்கான கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் நிறைவேற்று முகவர் நிலையங்களாகும். வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவர் நிலையமாகும். கொழும்பு நகர்ப்புற பிராந்திய போக்குவரத்து நெரிசலைக் குறைத்து நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்வதற்கு கொழும்பு நகரை மையமாகக் கொண்டு தெற்கு அதிவேகப் பாதை மற்றும் ஏனைய தேசிய வீதிகளை இணைப்பதற்கான அதிவேகப் பாதையைக் கொழும்பின் புறநகர்ப் பிரதேசத்தில் நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் II ஆம் கட்ட மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 44,097 மில்லியன் ஜப்பானிய யென்களுக்கு நிகரான ரூபா 55,482 மில்லியனாகும். அதில் 37,406 மில்லியன் யென்களுக்கு நிகரான ரூபா 46,759 மில்லியன் ஜப்பானிய சர்வதேசக் கூட்டுறவு முகவர் நிலையத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியிருந்தது. செயற்திட்டத்தின் II ஆம் கட்ட நிர்மாண வேலை 2008 மே மாதத்தில் ஆரம்பமாகி 48 மாதங்களுக்குள் 2012 ஏப்ரல் மாதமளவில் முடிவடையவிருந்தது. எவ்வாறாயினும், நெடுஞ்சாலைப் பிரிவின் நிர்மாண வேலைக்கான ஒப்பந்தம் 2009 ஒக்டோபர் 22 அன்று வழங்கப்பட்டு 2015 யூலை 18 அன்று முடிவடைந்திருந்தது. எவ்வாறாயினும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும்

வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப்பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதி, பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிரயாம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் ஏற்படும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்கும் வகையில் கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட தேவைகளுக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களில் (எஸ்ஓஈ) நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளலாம் என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூர் மற்றும் வெளி நாட்டு உசாத்துணையாளர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 8.30 மில்லியன் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் பொருட்டு செலுத்த வேண்டிய கடப்பாட்டுடன் வட்டியாகவும் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தால் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 80.26 மில்லியன் கூட்டுத் தொகை செயற்திட்டத்தின் நிதிக் கூற்றில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

**2.2.2 இணக்கஞ் செய்யப்படாத மீதிகள்**

செயற்திட்டத்தின் நிதிக் கூற்றில் காட்டப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 971,574 மேந்தலைச் செலவுகள் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பெற வேண்டிய மீதியாகிய ரூபா 164,274 உடன் இணங்கவில்லை. வீதி அபிவிருத்தி அதிகாரச சபைக்கு வழங்கப்பட வேண்டியதாக ரூபா 2.07 மில்லியனும் மீதியுடைய கூட்டுத் தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட வேண்டிய ஏனைய மீதிகளாகக் காட்டப்பட்ட போதும், பெற வேண்டியனவாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிதிக்கூற்றுக்களில் வேறெந்த மீதிகளும் காட்டப்பட்டிருக்க வில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் போன்ற ரூபா 304.96 மில்லியன் கிரயத்திலான செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்டு பல்வேறு நிறுவனங்களுக்கும் செயற்திட்டத்தால் கையளிக்கப்பட்டிருந்தவற்றை செயற்திட்டத்தில் ஆவணங்கள் இன்மையால் சரி, பிழை பார்க்க முடியவில்லை.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

ஒப்பந்த உடன்படிக்கையின் 102.1 ஆம் பகுதி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2003 பெப்ரவரி 27 ஆந் திகதிய 250 ஆம் இலக்கச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், ஒப்பந்தகாரரினூடாகச் செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்த மோட்டார் வாகனங்கள் ஒப்பந்த காலத்தின் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரச சபையிடம் கையளிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர்கள் மூலமாகக் ரூபா 186.98 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் நிதியுதவி அளிக்கப்பட்ட மற்றுமொரு செயற்திட்டத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், 2016 செப்டம்பர் 05 அன்று அவ்வாறான சொத்துக்களது உரித்து மாற்றஞ் செய்யப்பட்டிருந்த போதும், செயற்திட்டத்தின் சொத்தாக நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்து காட்டப்பட்டவாறிருந்தது.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதியப் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு நிதியேற்பாடு, மீளாய்வாண்டின்போதும் 2016 டிசெம்பர் 31 வரையுமான நிதியப் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளிவிபரம் கீழே காணப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | பாதீட்டு மதிப்பீட்டில் மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2016 ஆம் ஆண்டின் போது | | 2016 டிசெம்பர் 31 வரை | |
| | ஜப்பானிய யென் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பானிய யென் | ரூபா மில்லியன் | ஜப்பானிய யென் | ரூபா மில்லியன் |
| ஜசகூமுநி | | | | | | | |
| கடன் இல-91 | 5,718 | 5,445 | 1,410 (கடன் இல-91, இல-101) | | | | |
| கடன் இல-101 | 31,688 | 41,314 | | 1,092.47 | 1,382.08 | 36,323.97 | 45,953.46 |
| இலங்கை அரசாங்கம் | 6,691 | 8,723 | 50 | 32.06 | 40.56 | 1,077.41 | 1.363.03 |
| **மொத்தம்** | **44,097** | **55,482** | **1,460** | **1,124.53** | **1,422.64** | **37.401.38** | **47,316.49** |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

கடுவெல முதல் கடவத்தை வரையிலான 8.9 கிலோ மீட்டர் வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலையினது II ஆம் கட்ட வேலை காணிச் சுவீகரிப்பு மற்றும் ஏனைய நிர்வாகக் கிரயம் நீங்கலாக ரூபா 44.88 பில்லியன் கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு 2015 யூலை 18 ஆந் திகதியன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 47.37 பில்லியன் பெறுமதியான நிர்மாண வேலைகள் 2016 டிசெம்பர் 31 அன்றே சான்றுறுதிப்படுத்தப்பட்டு, முடிவடைந்த நிர்மாண வேலைக்கான இறுதிப் பட்டியல் 2017 செப்டம்பர் 30 ஆந் திகதியளவிலும் செயற்திட்ட முகாமைத்துவக் கூறினால் பெறப்படாதிருந்தது.

**3.3 காணிச் சுவீகரிப்பும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், சுவீகரிக்கப்படவிருந்த அரச காணிகளை உள்ளடக்கிய 1,221 காணித்துண்டுகளில் 1,205 காணித் துண்டுகள் மாத்திரமே 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சுவீகரிக்கப்பட்டிருந்தன. மேலும், 2016 டிசெம்பர் 31 வரை 614 காணித் துண்டுகளுக்கு ரூபா 1790.70 மில்லியன் கூட்டுத் தொகையான இழப்பீடு வழக்கப்பட்டுமிருந்தது. காணிச் சுவீகரிப்பில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 912,574 வழங்கப்பட்டிருந்த போதும், இழப்பீடு தாமதமடைந்ததால் வட்டியாக ரூபா 290.05 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பியகமவில் உள்ள றுக்கதனகஹவத்த எனும் இடத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு செயற்திட்டம் ரூபா 22.83 மில்லியன் செலவில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. பாதிக்கப்பட்ட நபர்களின் விருப்பின்மைக் குறைவால் 10 காணித் துண்டுகள் பயன்படுத்தப்படாதிருந்தமை 2017 யூலை 11 ஆந் திகதிய கணக்காய்வாளர்களது நேரடி விஜயத்தின்போது புலனாகியது. மேலும், வெள்ளத்தைத் தடுப்பதற்காகக் காணித்துண்டுகளைத் தடுப்புச் சுவர்கள் மூலம் பிரித்திருந்தமையால் ஏனைய 07 காணித்துண்டுகளும் மீள் குடியேற்றத்திற்கு வசதி அற்றனவாக இருந்தன.